TAMIL NADU
GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 6A] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 18, 2004
Maasi 6, Subhanu, Thiruvalluvar Aandu–2035

Part VI—Section 2
(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
# சென்னை

## மாநில ஆலோசனைக்குழு ஒழுங்குமுறை விதிகள்

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

## Notification No.TNERC/SACR/2/2 dated 8.1.2004

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (2003 ஆம் ஆண்டின் 36 வது சட்டம்) 87 வது பிரிவின் உட்பிரிவு (1) ன் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் அதற்கு இதன் பொருட்டு இயல்விக்கும் எல்லா அதிகாரங்களையும் செலுத்தி இதன் மூலம் கீழ்க்கண்ட ஒழுங்குமுறை விதிகளை இயற்றுகிறது. இந்த ஒழுங்குமுறை விதிகள் ஜூலை 17,2002 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் 5.7.2002 தேதியிட்ட த.நா.மி.ஒ.ஆ/மா.ஆ.கு.ஒ./2/1 எண்ணிட்ட அறிவிக்கையில் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (மாநில ஆலோசனைக் குழு) ஒழுங்குமுறை விதிகளை ரத்துச் செய்கிறது.

1 (1) இந்த ஒழுங்குமுறை விதிகள் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநில ஆலோசனைக்குழு ஒழுங்குமுறை விதிகள் என்று அழைக்கப்படும். குறுந்தலைப்பு, தொடக்கம் மற்றும் குறிக்கோள்

(2) இந்த ஒழுங்குமுறை விதிகள் தமிழ்நாடு அரசிதழில் இவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 (1) சூழ்நிலை வேறுபொருள் குறித்தாலன்றி, இந்த ஒழுங்குமுறை விதிகளில் :- பொருள் வரையறைகள்

(அ) "சட்டம்'' என்பது 2003 ம் ஆண்டு மின்சாரச் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 36 வது சட்டம்) எனப் பொருள்படும்;

(ஆ) "ஆணையம்'' என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எனப் பொருள்படும்;

(இ) "தலைவர்'' என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(ஈ) "உறுப்பினர்'' என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர் எனப் பொருள்படும்;

(உ) "செயலாளர்'' என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர் எனப் பொருள்படும்;

(ஊ) "அலுவலர்'' என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒரு அலுவலர் எனப் பொருள்படும்;

(ஏ) "குழு" என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் அமைக்கப்பட்ட மாநில ஆலோசனைக் குழு எனப் பொருள்படும்;

(2) இந்த ஒழுங்கு முறை விதிகளில் வருகிறதும் மற்றும் இங்கு பொருள் வரையறை செய்யப்படாமலிருந்து ஆனால் 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள் அந்தச் சட்டத்தில் அவற்றிற்கு குறிக்கப்பட்டுள்ள அதே பொருள் வரையறைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

3 இந்த ஆணையம், அறிவிக்கை மூலமாக, குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து 'தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மாநில ஆலோசனைக் குழு' என அழைக்கப்பட வேண்டிய ஒரு குழுவை அமைக்கலாம்.

ஆலோசனைக் குழுவை அமைத்தல்

4 சட்டத்தின் 87 (2) ஆம் பிரிவு குழுவின் உறுப்பினர்களைப்பற்றியதாகும்.. அதில் சொல்லியபடி,

இக்குழுவின் உறுப்பினர்கள்

"மாநில ஆலோசனைக் குழு, வணிகம், தொழில், போக்குவரத்து, விவசாயம், தொழிலாளர், நுகர்வோர்கள், அரசு சாரா அமைப்புகள், மின் துறையில் கல்வி மற்றும் ஆராய்ச்சி சார்ந்த அமைப்புகள் ஆகியவற்றில் அக்கறையுள்ளவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கும் வண்ணம் இருபத்தியொன்று உறுப்பினர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்."

5 சட்டத்தின் 87 (3) ஆம் பிரிவு குழுவின் தலைவர் மற்றும் அலுவல் வழி உறுப்பினர்களைப் பற்றியதாகும். அதில் சொல்லியபடி,

தலைவர் மற்றும் அலுவல் வழி உறுப்பினர்கள்

"மாநில ஆணையத்தின் தலைவர் மாநில ஆலோசனைக் குழுவின் அலுவல் தலைவராய் இருப்பார். மற்றும் மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர் நலன் மற்றும் பொது விநியோக முறையை நிர்வகிக்கும் பொறுப்புடைய மாநில அரசின் செயலாளர் அலுவல் வழி உறுப்பினராய் இருப்பார்கள்."

6 ஆணையமானது, தனிப்பட்ட நபர்கள் / சார்பாண்மை அமைப்புகள் /இதர அக்கறை கொண்ட பிரிவுகளின் அமைப்புகள் ஆகியோரைக் கலந்தாலோசித்தப் பிறகு, இக்குழுவில் பணியாற்றுவதற்கு தேர்வு நாடுநர்களை உறுப்பினர்களாக நியமிக்கலாம். ஆணையம் ஒவ்வொரு துறையில் உறுப்பினர்களாய் நியமிக்க வேண்டிய எண்ணிக்கையை, சம்பந்தப்பட்ட துறையானது மின் தொழிலோடு கொண்டிருக்கும் உறவின் முக்கியத்துவத்தைப் பொறுத்து வரையறுத்துக் கொள்ளலாம். சட்டத்தின் 87 (2) ஆம் பிரிவில் குறிப்பிட்ட அக்கறையுள்ள துறைகளுக்கு மிகையாக மின்சாரத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களை ஆணையம் அமர்த்தலாம். ஆனால் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையாகிய 21 க்கு அதிகமாகக் கூடாது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல்

7 இக்குழுவின் உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகள் கொண்ட பதவிக் கால அளவுக்கு நியமனம் செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அந்த உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஆண்டு தோறும் ஓய்வு பெறுதல் வேண்டும். உறுப்பினர் எவரையும் அவரது / அவளது பதவிக்காலம் முடிவுறுகையில், திரும்பவும் உறுப்பினராக நியமனம் செய்வதற்கு ஆணையத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

ஆலோசனைக் குழுவுக்கு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்

8 ஆணையம், அவ்வப்போது, குறிப்பிட்ட துறையில் வல்லுநர்களை, மாநில ஆலோசனைக் குழு கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள அழைத்து அவர்களின் கருத்துக்களையும் / ஆலோசனைகளையும் கோரலாம். அவர்களுக்கு, பொருந்துமெனக் கருதும் தகுந்த மதிப்பூதியத்தையும் வழங்கலாம்.

ஆலோசனைக்குழு கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள்

9 ஆணையத்தின் செயலாளர் இக்குழுவிற்கும் செயலாளராக இருப்பார். அவர் இந்த கூடுதல் பணிக்காக மிகை ஊதியம் பெறுவதற்கு உரிமையுடையவராகார்.

ஆலோசனைக் குழுவின் செயலாளர்

10 சட்டத்தின் 88ஆம் பிரிவில் விவரித்துள்ளபடி ஆணையத்திற்கு கீழ்க்கண்ட விஷயங்களில் ஆலோசனை வழங்குதல் வேண்டும் என்பதே ஆலோசனைக் குழுவின் நோக்கமாகும்..

இந்த ஆலோசனைக் குழுவின் குறிக்கோள்கள்

(அ) முக்கியமான கொள்கை அம்சங்கள்;

(ஆ) மின் விநியோக உரிமம் பெற்றவர்களின் சேவையின் தரம், தடங்கலற்ற சேவை மற்றும் சேவையின் அளவு ஆகியவை சம்பந்தமான விஷயங்கள்;

(இ) உரிமம் பெற்றவர்கள் அவர்களது உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும், தேவைப்பாடுகள் ஆகியவற்றிற்கு இணங்கி செயல்படல்;

(ஈ) நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல்;

(உ) பயனகங்களால் மின்சக்தி வழங்குதல் மற்றும் அவர்கள் ஆற்றுகிற பணியின் பொதுவான சிக்கன மற்றும் செயல்திறன் அளவு;

11 இக்குழுவினால் அலுவலை நடத்துவது கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் முறைப்படுத்துதல் வேண்டும். இந்த ஆலோசனைக் குழுவினால் அலுவலை நடத்துதல்

(1) இந்தக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவது செயலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும். மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளதான கூட்டத்தின் தேதி, நேரம், மற்றும் இடம் ஆகியவை குறித்து எழுத்துருவிலான ஒரு அறிவிப்பினை, குறைந்தபட்சம் 14 நாட்களுக்குக் குறையாத கால அளவில் குழுவின் உறுப்பினர்களுக்கு அவர் கொடுக்க வேண்டும். தலைவர் தேவையெனக் கருதுவாரானால், அந்த அறிவிப்புகள் கொடுக்கப்பட வேண்டிய கால அளவை அவசர அலுவல் எதையும் நடத்துவதற்கு குறைக்கலாம். அந்த அறிவிப்பானது அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் சம்பந்தப்பட்ட (அலுவலகத்) தாள்கள் ஏதேனும் இருக்குமானால் அதனையும் கூட உள்ளடக்கிக் கொண்டிருக்கும்.

(2) குழு உறுப்பினர்கள் செயலாளருக்கு (மேலே 10 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறான) அடுத்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்கான தொடர்புடைய விஷயப்பொருள் எதனையும் ஒரு சுருக்க குறிப்பு மூலமாக எழுதி அனுப்பலாம்.

(3) குழுவின் தலைவர், குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். அவர் இல்லாத போது, குழுவின் மிக மூத்த உறுப்பினர் அந்தக் கூட்டத்திற்கு தலைவராக இருத்தல் வேண்டும்.

(4) குழுவின் எல்லாக் கூட்டங்களும், ஆணையம் வேறுவிதமாக அறிவிக்கை செய்தாலன்றி, சென்னையிலுள்ள ஆணையத்தின் அலுவலக வளாகங்களில் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) கூட்டத்தில் உள்ள விவாதங்கள் மற்றும் அவற்றின் மீதான முடிவுகள் ஏதேனும் எடுக்கப்படுமானால், அவை கூட்டத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலை மட்டுமே கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். தலைவர் மட்டுமே கூட்டத்தின் முடிவில் நிகழ்ச்சி நிரலுக்கு கூடுதல் விஷயப் பொருள்களைக் கொண்டு வரலாம்.

(6) குழுவானது குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும்.

(7) ஒரு அறிவிப்பானது ஒரு உறுப்பினரது பதிவுச் செய்யப்பட்ட முகவரிக்கு நிர்ணயிக்கப்படுகிற காலத்திற்குள் அஞ்சல் மூலமாக அல்லது செய்திக் கொணர்பவர் மூலமாக அனுப்பப்பட்டால் உரியவாறு அனுப்பப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) குழுவின் உறுப்பினர் எவரும், குழுவின் தொடர்ச்சியாகவுள்ள மூன்று கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு தவறுகையில், அவர் உடனடியாக குழுவின் ஒரு உறுப்பினராக இருப்பதற்கான தகுதி இல்லாதவராகிறார்.

(9) குழுவின் ஒவ்வொரு கூட்ட நடவடிக்கைகளும் இந்த நோக்கத்திற்காக பேணப்பட்டு வரக்கூடிய நிகழ்ச்சி குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டு, கூட்டத் தலைவரால் (அது) கையெழுத்திடப்படுதல் வேண்டும். ஆணையத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு குறிப்புடன் சேர்த்து அடுத்து வருகிற கூட்டத்தில் உறுப்பினர்களின் தகவலுக்காகப் படிக்கப்படுதல் வேண்டும்.

(10) குழுவின் கூட்டத்தில் குறைந்தபட்சம் ஆறு பேர் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாத போது, தலைவர் கூட்டத்தை ஒத்தி வைக்கலாம். ஒத்தி வைக்கப்பட்டுள்ள கூட்டத்திற்கு மேற்கொண்டு அறிவிப்பு எதுவும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மற்றும் ஒத்தி வைக்கப்படுகிற கூட்டத்திற்கு குறைந்தபட்ச அங்கத்தினர் எண்ணிக்கை தேவையில்லை. கூட்டம் ஆரம்பித்த பிறகு தேவையான குறைந்தபட்ச அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைந்தால் கூட்டத்தை கலைக்கக் கூடாது. கூட்டம் தொடர்ந்து நடத்தப்படல் வேண்டும்.

(11) ஒத்தி வைக்கப்படுகிற கூட்டத்தில், ஒத்தி வைப்பு செய்யப்படுகையில் கூட்ட நிகழ்ச்சியில் மீதமுள்ள பொருள் விஷயங்களைத் தவிர மற்றைய விஷயம் எதுவும் விவாதிக்கப்படுதல் கூடாது. ஆனால், ஆலோசனைக் குழுவின் ஒத்தி வைக்கப்பட்டுள்ள கூட்டத்தின் முன்பாக, தலைவர் அவரது கருத்தில் அவசரம் எனக் கருதுகிற புதிய விஷயம் எதனையும் அறிவிப்புடனோ அல்லது அறிவிப்பு இல்லாமலோ, கொண்டு வரலாம் அல்லது கொண்டு வரப் பணிக்கலாம்.

(12) இந்தக்குழுவின் நடவடிக்கை எதுவும் குழுவில் காலியிடங்கள் இருக்கும் காரணத்தை மட்டுமே கொண்டோ அல்லது அறிவிப்பு அல்லது நிகழ்ச்சி நிரல் தாளைப் பெறாமைக் காரணங்கொண்டோ (அந்த அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரல் உரியவாறு அனுப்பப்பட்டிருக்குமானால்) அல்லது கூட்டத்தின் அலுவல் நடத்துதலில் ஏதேனும் முறையின்மை காரணங்கொண்டோ, செல்லத்தக்கதாகாது.

(13) தலைவர், நடந்து கொண்டிருக்கும் கூட்டம் எதிலும் அந்தக் கூட்டத்தில் எந்த உறுப்பினரின் நடத்தையாவது முறையின்மையாய் இருப்பதாக கருதினால், அந்த உறுப்பினரை கூட்டத்திலிருந்து வெளியே செல்லுமாறு பணிக்கலாம். அவ்வாறு பணிக்கப்படுகிற அத்தகைய உறுப்பினர் எவரும் அவர் வெளியே சென்றாலும் சரி, செல்லாவிட்டாலும் சரி, கூட்டத்தை விட்டு வெளியேறி விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(14) கூட்டங்களை நடத்துதலில் பின்பற்றவேண்டிய வழிமுறைகளில் அரிதியிட்டு கூறப்படாத நேர்வுகளில், கூட்டத்தின் போது அலுவல் நடத்துதல் தொடர்பான எல்லா விஷயங்களிலும், தலைமை தாங்குகிற தலைவரின் முடிவானது இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

12 (1) இந்தக் குழுவின் உறுப்பினர், இந்த ஒழுங்குமுறை விதிகளில் வகைச் செய்யப்பட்டிருப்பதைத் தவிர வேறு ஊதியம் எதற்கும் உரிமையுடையவராகார். குழுவின் உறுப்பினர்களுக்கு கட்டணம் மற்றும் பயணப்படிகள்

(2) பதவி வழி உறுப்பினர்களைத் தவிர, இக்குழுவின் மற்றைய எல்லா உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ரூ. 1000/– அமர்வுக் கட்டணமாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு அரசு ஊழியர் அல்லது பொது நிறுவனப் பணியாளர் எவரும் இந்தக் குழுவின் உறுப்பினராக இருக்கும்போது, அவருக்கான பயணப்படி மற்றும் தினப்படிகளை அவரது துறையிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். ஆணையத்தினால் அமர்வுக் கட்டணம் மட்டுமே கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) மேலே (3) இல் குறிப்பிட்ட உறுப்பினர் தவிர மற்ற உறுப்பினர்களுக்கு, பயணப்படி மற்றும் தினப்படி உள்ளடங்கலாக மற்றைய செலவுத்தொகையை ஆணையம், அவ்வப்போது குறிப்பிடலாகும் வீதங்களில் வழங்கலாம். இவ்விவரங்கள் அவர்களது நியமன ஆணைகளில் குறிப்பிடப்படல் வேண்டும்.

13 குழுவின் உறுப்பினர் எவரும் தம் கைப்பட எழுத்துருவில் இந்த ஆணையத்தின் செயலாளருக்கு அனுப்பப்படுகிற செய்தியின் மூலமாக இந்தக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆணையம் ஒரு மாற்று உறுப்பினரை நியமனஞ் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும். பதவி விலகுதல்

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்